ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் – கழக மூத்த முன்னோடி

# புரவலர் அன்பில் தர்மலிங்கம் 107வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு – திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை!



திருச்சி, மே 16 -

புரவலர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் 107 வது பிறந்தநாள் விழா:

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான புரவலர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் 107 வது பிறந்தநாள் விழா இன்று திருச்சியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தந்தை பெரியாரின் பாசத்தில் வளர்ந்தவரும், பேரறிஞர் அண்ணாவின் இதயம் கவர்ந்த தம்பியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நம்பிக்கைக்குரிய நண்பருமான அன்பிலார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மு. மதிவாணன் - மாநகரக் கழகச் செயலாளர். மாநிலங்கள் அவை உறுப்பினர் கவிஞர் சல்மா, வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள். கோவிந்தராஜ் மாவட்ட அவைத் தலைவர்.

செந்தில் மாநில அணி அமைப்பாளர். மோகன் பகுதி கழகச் செயலாளர்.

மேலும், இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு புரவலர் அன்பிலாரின் புகழுக்கு மரியாதை செலுத்தினர்.

---

தென்காசி தொகுதியில் வென்ற

# டாக்டர் கலை கதிரவன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி, மே 16 –

பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன், எம்.எல்.ஏ., தென்காசி தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்குட்பட்ட கிராமம் மற்றும் வார்டு வாரியாக வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விவரம் குறித்து தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு வருமாறு:–

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன், எம்.பி.பி.எஸ்., அவர்கள் வருகிற 16.5.2026 முதல் 19.5.2026 வரை தென்காசி தொகுதிக்குட்பட்ட ஒன்றிய – நகர – பேரூர்களுக்குட்பட்ட கிராமம் மற்றும் வார்டு வாரியாக, தனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விவரம் பின்வருமாறு:–

**தென்காசி தெற்கு மாவட்டம்**
**ஆலங்குளம் வடக்கு ஒன்றியம்**
**16.05.2026 -**
**சனிக்கிழமை - காலை**

ஆலங்குளம் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் எம்பிஎம்.அன்பழகன் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு மறுக்கலான் குளத்தில் தொடங்கி, சிவலசமுத்திரம், தங்கம்மாள்புரம், மறுதாத்தாள்புரம், பலபத்திரராமபுரம், மாவிளியூத்து, அமுதாபுரம், கல்லத்திகுளம், வேலாயுத புரம், சண்முகாபுரம், கங்கணாங்கிணறு, அண்ணாமலைப்புதூர், மேலமருதப்பபுரம், ஊத்துமலை, வடக்குக் காவலாக்குறிச்சி, கம்மாவூர், ருக்மணி யாள்புரம், தட்டப்பாறை, கண்ணாடிகுளம், முத்த ம்மாள்புரம், குறிச்சாங்குளம், செவலூர், நொச்சிகுளம், நவநீத கிருஷ்ண புரம், கீழக்கலங் கல், மேலக்கலங்கல், உச்சிப்பொத்தை, கருப்பினான்குளம், குருந்தன் மொழி ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**ஆலங்குளம் மத்திய ஒன்றியம்**
**16.05.2026 -**
**சனிக்கிழமை - மாலை**

ஆலங்குளம் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் ஷேக் முகம்மது அவர்கள் முன்னிலையில் மாலை 5.00 மணிக்கு வீராணத்தில் தொடங்கி, அகரம், நாச்சியார்புரம், ஏந்தலூர், சோலைச்சேரி, கருவந்தா, அச்சங்குன்றம், லட்சுமிபுரம், பரங்குன்றாபுரம், மருதபுரம், மரியதாய்புரம், கரையானூர், இரதமுடை யார்குளம், குறிச்சான்பட்டி, வாடியூர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**தென்காசி கிழக்கு ஒன்றியம்**
**17.05.2026 -**
**ஞாயிற்றுக்கிழமை - காலை**

தென்காசி கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஏஆர்எம்.அழகுசுந்தரம் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு குத்துக்க ல் வலசையில் தொடங்கி, அண்ணாநகர், கே.ஆர். காலனி, அய்யாபுரம், வேதம்புத்தூர், அழகப்பபுரம், இலஞ்சி பேரூர், காசிமேஜர்புரம், குற்றாலம் பேரூர், மேலகரம் பேரூர், பாட்டபத்து, ஆயிரப்பேரி, அங்கராயன்குளம், முத்துமாலைபுரம், மத்தளம்பாறை, ஆசாத் நகர், பாட்டாக்குறிச்சி, திருச்சிற்றம்பலம் ஆகிய ஊர்களிலும் – சுந்தரபாண்டியபுரம் பேரூரிலும் நன்றி தெரிவிக்கிறார்.

**கடையநல்லூர் தெற்கு ஒன்றியம்**
**18.05.2026 - திங்கட்கிழமை**
**- காலை 7.00 மணி**

கடையநல்லூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஐ.ஜெயா அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு துரைச்சாமி புரத்தில் தொடங்கி, துரைச்சாமிபுரம் ஆதிதிராவிடர் காலனி, ரெட்டைகுளம், சீனிவாச காலனி, பூப்பாண்டியாபுரம், சுப்பையாபுரம், திரிகூடபதி, குலையநேரி, அம்மையாபுரம், ஆனைகுளம், அய்யாபுரம், அருணாச்சலபுரம் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**சுரண்டை நகரம்**
**18.05.2026 - திங்கட்கிழமை**
**- காலை 10.00 மணி**

சுரண்டை நகரப் பொறுப்பாளர்கள் ஆ.கணேசன் மற்றும் வைகை கணேசன் ஆகியோர் முன்னிலையில் காலை 10.00 மணிக்கு பங்களாச் சுரண்டையில் தொடங்கி, கீழச்சுரண்டை, ஆலடிப்பட்டி, சிவகுருநாதபுரம், அண்ணா நகர், கஸ்பா, வரகுணராமபுரம், குருங்காவனம் ஆகிய இடங்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**தென்காசி நகரம்**
**18.05.2026 - திங்கட்கிழமை**
**- மாலை 3.00 மணி**

தென்காசி நகரப் பொறுப்பாளர் ஆர்.சாதீர் அவர்கள் முன்னிலையில், மாலை 3.00 மணிக்கு தென்காசி நகரத்திற்குட்பட்ட 1 வது வார்டு காளிதாசன் நகரில் தொடங்கி 2வது வார்டு டி.என்.எச்.பி. காலனி, 3வது வார்டு மங்கம்மாள் சாலை, 4வது வார்டு மங்கம்மாள் சாலை, 5வது வார்டு களக்கோடித் தெரு, 12வது வார்டு எல்.ஆர்.எஸ். பாளையம், 13வது வார்டு தைக்காரத் தெரு, பொத்தை, 14வது வார்டு கூலக்கடை பஜார், அரிப்புகார தெரு, 17வது வார்டு மரைக்காயர் பள்ளி தெரு, 15, 6வது வார்டு மலையான் தெரு, 11வது வார்டுஆபாத் பள்ளித் தெரு, 10வது வார்டு காட்டுபாவா பள்ளித் தெரு, 18வது வார்டு நடுப்பேட்டைத் தெரு, 9, 10வது வார்டு மவுண்ட் ரோடு, மனக்காவல் தெரு, 20வது வார்டு எஸ்.கே.பி. தெரு, 21வது வார்டு சொர்ணபுரம் தெரு, புதுமனைத் தெருக்கள், 23வது வார்டு முப்புடாதி அம்மன் கோவில் தெரு, 7,8, 22வது வார்டு கீழப்புலியூர், 33வது வார்டு ஆசாத் நகர், 25, 26வது வார்டு கீழப்பாளையம், மாதாங்கோவில் தெரு, 19வது வார்டு கோவிக்கால் தெருக்கள், 27வது வார்டு பெரியபள்ளி வாசல் தெரு, 28வது வார்டு ஒப்பனைத் தெரு, 29, 32வது வார்டு சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி, 16வது வார்டு கன்னிமாரம்மன் கோவில் தெரு, 30வது வார்டு மாசி வீதிகள், 31வது வார்டு சிந்தாமணி ஆகிய வார்டுகளில் நன்றி தெரிவிக்கிறார்.

**கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம்**
**19.05.2026 -**
**செவ்வாய் கிழமை -**
**காலை 7.00 மணி**

கீழப்பாவூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஜே.கே.ரமேஷ் அவர்கள் முன்னிலையில், காலை 7.00 மணிக்கு திரவிய நகரில் தொடங்கி, வெள்ளைப்பனையேறிப்பட்டி, நாடக்கன்னுப் பட்டி, சீதாராமன்பட்டி, கணக்கநாடார்பட்டி, அரியப்பபுரம், ரகுமானியபுரம், சிவசைலனூர், பொடியனூர், ஆவுடையசிவன்பட்டி (ஊரணி கீழமுக்கு) கருவேல்நாடார் தெரு, மாடியனூர், ராசப்பநாடானூர், அழகம்பெருமானூர், சின்னநாடானூர், சாலடியூர், மருதடியூர், ஆனைகுட்டியூர், ஆவுடையானூர் பேருந்து நிலையம், மாடக்கன்னுப்பட்டி, புதூர், கொண்டலூர், திப்–மீனாட்சிபுரம், திப்பணம்பட்டி மைதானம், நாட்டார்பட்டி, செந்நெல்தாபுதுக்குளம், பூவனூர், ஐயனூர், சிவநாடானூர், இராமநாதபுரம், ஆரியங்காவூர், துரைச்சாமி யாபுரம், வன்னியசுந்தரபுரம், திருமலாபுரம், வெண்ணியூர், பூசைத்தாள் பட்டி, மடத்தூர், ராமச்சந்திரப்பட்டணம் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

**கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம்**
**19.05.2026 -**
**செவ்வாய் கிழமை -**
**மாலை 3.00 மணி**

கீழப்பாவூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் சீனித்துரை அவர்கள் முன்னிலையில், மாலை 3.00 மணிக்கு வேட்டையக்காரன்குளத்தில் தொடங்கி கடப்போக்கத்தி, குபேரப்பட்ட ணம், ராமலிங்கபுரம், மேலமெஞ்ஞானபுரம், கண்டமங்கலம், புளிச்சிக்குளம், மத்தளம்பாறை, புல்லுக்காட்டு வலசை, முப்புலியூர், அருந்ததியர்புரம், சின்னத்தம்பி நாடார்பட்டி, கல்லூரணி, செல்வவிநாயகர்புரம், குருசாமிபுரம், பாவூர்சத்திரம், வி.ஏ. நகர், மலையராமபுரம், பஞ்சபாண்டியூர், பனையடிப்பட்டி, செட்டியூர், காமராஜ் நகர் (தெற்கு), காமராஜ் நகர் (வடக்கு), குலசேகரப்பட்டி, சடையப்புரம், இந்திரா நகர், மேலப்பாவூர், குறும்பலாப் பேரி, தாவீது நகர், நேரு நகர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.


**கீழப்பாவூர் மத்திய ஒன்றியம்**
**19.05.2026 -**
**செவ்வாய் கிழமை -**
**இரவு 8.00 மணி**

கீழப்பாவூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் எம்.சேசுராஜன் அவர்கள் முன்னிலையில் இரவு 8.00 மணிக்கு துவரங்காட்டில் தொடங்கி, இடையார்தவணை, இனாம்வெள்ளகால், இராஜபாண்டி, தாயார் தோப்பு, செம்புலிப்பட்டணம், கோவிந்தப்பேரி, வீரகேரளம்பு தூர், இராஜகோபாலப்பேரி, அதிசயபுரம், இராமனூர், கலிங்கப்பட்டி, கோட்டை அண்ணா நகர் ஆகிய ஊர்களில் நன்றி தெரிவிக்கிறார்.

இவ்வாறு வே.ஜெயபாலன் அறிவித்துள்ளார்.

---

# வாழ்க புது சோபா



பொதுவாக
சோபா மீது உட்காரலாம்!
விளையாடலாம்!
முதுகு சாய்த்து ஓய்வெடுக்கலாம்!
படுக்கையாக்கிப் படுக்கலாம்!

மாற்றம் வேண்டுமென்று
எக்ஸ்சேஞ்ச் ஆஃபரில்
சோபா கொடுத்து
அரியணையும் வாங்கலாம்!

சோபாவுக்குள் பஞ்சும் இருக்கலாம்!
தேங்காய் நாரும் இருக்கலாம்
ஃபோம் இருக்கலாம்
லட்சுமி தாண்டவமாடும் தாளும் இருக்கலாம்
கோலார் தங்க வயலின் சாயலும் இருக்கலாம்!
கொடுக்கல் வாங்கலின்
ஆழம் அகலம் நீளம் பொறுத்தது அது!

நம் வீட்டுக்கு
விருந்தினர் வரும்போது
நம் சோபாவில்தான் உட்கார வைப்போம்

ஆனால்
விருந்தினராகச் செல்லும் வீட்டுக்கும்
தானே சோபாவைத்
தூக்கிக் கொண்டு போவது என்பது
லாட்டரியில் கிடைக்கும் ஜாக்பாட்
பம்பர் பரிசு வகையானது!

நல்ல வேளை
எந்த
சோபாவுக்கும்
வாய் இல்லை!

உள்ளே திணித்திருப்பதை
சோபாவால் சொல்ல முடியாது!

வாழ்க புது சோபா!



(இது சோபா பற்றிய கவிதை மட்டுமே )

**ஆண்டாள் பிரியதர்ஷினி**

---

ஏங்கித் தவிக்கும் தமிழ்நாட்டு மக்கள்!

# ரீலாக இல்லாமல் ரியலாக தாங்கிப் பிடிக்குமா தமிழக அரசு?

**பி.ஜாகீர் உசேன்**
திருவாரூர்

தமிழ்நாட்டில் முந்தைய தி.மு.க. அரசு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனை திட்டங்களால் மிகப்பெரிய பலனை பெற்று, தங்களின் வாழ்க்கைத்தரத்தை முற்றிலும் மாற்றி, சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வியில் வளர்ச்சி பெற்றுவந்த நிலையில் , மூட நம்பிக்கையின் உதவியோடும், சமூக வலைதளங்களின் தவறான செய்திகளை சினிமா பாணியில் பரவவிட்டு, மக்களை திசை திருப்பி, போலியான மாயையை கட்டமைத்து, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியால் பலன்பெற்ற மக்களின் நன்றிக்கடனாய் வாக்குகளைப் பெற்றவர்களின் தயவால் ஆட்சிக்கு வந்திருக்கும் தற்போதய சிறுபான்மை அரசின் முதல் கோணல், முற்றிலும் கோணலாகுமோ என்கிற அச்சத்தில் தமிழ்நாட்டு மக்கள் உறைந்து போய் உள்ளனர்.

தமிழ்நாட்டு மக்களில் இதுவரை சுமார் 1 கோடியே 31 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் தங்களுக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத்தொகையில் தங்களின் அன்றாட குடும்பச் செலவையோ, அவசர மருத்துவச் செலவையோ எதிர்கொண்டு நிம்மதியாக வாழ்ந்த னர்.

ஏறத்தாழ 897.82 கோடி பெண்கள் தங்களின் அத்தியாவசிய பயணத்திற்கு கட்டணமில்லாமல் விடியல் பயணம் மேற்கொண்டு அதில் மிஞ்சிய கட்டணத்தொகையில் இதர குடும்ப செலவுகளை சமாளித்தனர், ,

புதுமைப்பெண் திட்டத்தால் நம்பிக்கையோடு தனது மகள் சமுதாயத்தில் பட்டதாரியாக வலம் வர கல்லூரி படிப்பை சுமார் 2,02,824 மாணவிகள் தொடர்ந்தனர், தனது மகனும் பட்டதாரியாகி வேலைவாய்ப்பைப் பெற தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 3.28 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர்.

காலை நேர சமையல்கட்டு பணிகளில் இருந்து பெண்கள் கொஞ்சம் ஓய்வெடுக்க பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவு திட்டங்களில் 20.73 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் பெரிதும் பயன் பெற்றனர்.

ஏற்கனவே நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வீட்டில் முடங்கிக் கிடந்தவர்கள் மக்களைத் தேடி மருத்துவத்தால் 2.50 கோடி பேர் வீடு தேடி வந்த மருத்துவ உதவிகளாலும், மருந்து மாத்திரைகளாலும் நிம்மதியோடு வாழ்ந்தனர்.

அரசின் உதவிகளைப்பெற அரசு அலுவலகங்களுக்குச் சென்று அலையும் நிலை மாறி , அரசு எந்திரமே தங்கள் பகுதிக்கு வந்து குறைகளை தீர்த்த அதிசயத்தை உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சுமார் 28.87 மனுக்களுக்கு தீர்வு தந்தது.

வயது முதிர்ந்தவர்களுக்கு ரேஷன் பொருட்கள் 27.55 குடும்பங்களுக்கு வீடு தேடிவந்து தாயுமானவர் திட்டம் அரசாலேயே கொடுக்கப்பட்டது.

இப்படி தொடர்ந்து தமிழ்நாட்டை , நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்து ஆண்டுகால மக்களின் வாழ்க்கைத்தரம் தற்போது மிகப்பெரிய கேள்விக்குறியோடு தொங்கிக்கொண்டிருக்கிறது .

மகளிர் உரிமைத்தொகையால் நிம்மதி பெருமூச்சுவிட்ட பெண்களின் நிம்மதி மூச்சு தற்போது திணற தொடங்கி இருக்கிறது, விடியல் பயணம் இல்லாமல் போய்விடுமோ என ஏக்கம் வந்திருக்கிறது, மகனின் மகளின்கல்லூரிக்கனவு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் எதிர்பார்ப்பால் இருண்டு போய்விடுமோ என்கிற ஏக்கம் ஏழை பெற்றோர்களின் எண்ணங்களில் உதிக்க தொடங்கிவிட்டது. வயது முதிர்ந்தவரும், நோய் வாய்பட்டோரும் இந்த மாதம் ரேஷன் பொருட்கள் வருமோ வராதோ? என்றும் மருத்துவ உதவிகள் வருமா வராதோ ? என்றும் ஏக்கப் பெருமூச்சு விட தொடங்கிவிட்டனர். அரசின் உதவிகளை பெற இனி அரசு அலுவலகங்களுக்கு எத்தனை முறை அலைய விட போகிறார்களோ? என்கிற பெரிய கவலை மக்களின் முகத்தில் பரவ தொடங்கிவிட்டது.

இதையெல்லாம் புதிதாக பதவி ஏற்ற அரசு புரிந்துகொள்ள வேண்டும். , எதிர்க்கட்சி தலைவர் சட்டமன்றத்தில் வைத்த குற்றச் சாட்டுக்களுக்கு பதில் இல்லாமல் அமைதியாக இருந்த தற்போதைய தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று நாட்டின் ஒவ்வொரு குடும்பதின் நிலையறிந்த மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ரீல்ஸ் ஆட்சி நடத்தாமல் ரியல் ஆட்சி நடத்த வேண்டும்.


மாறாக தங்கள் வசம் உள்ள சமூக வலைதள கோஷ்டிகள் மூலம் “அது வேண்டாம்”.. “இது வேண்டாம்”.. என ரீல்ஸ் மூலம் போலியான நாடகங்களை பரப்பி, திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை, பழிவாங்கும் எண்ணம் மட்டுமே கொண்ட தனது சகாக்கள் கொடுக்கும் மக்கள் விரோத யோசனைகளால் முடக்க நினைத்தால், அதற்கு முதலமைச்சர் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை பெரும்பாலான மக்களின் மனநிலை உணர்த்துகிறது.

எனவே நீங்கள் எப்படி வேண்டுமானாலும் ஆட்சியை தொடர, உங்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிப்போருக்கு எதை வேண்டுமானாலும் கொடுங்கள், எதைவேண்டுமானாலும் செய்யுங்கள், ஆனால், ஏற்கனவே சென்ற தி.மு.க. ஆட்சியில் பெற்றுவந்த மக்கள் நலத்திட்டங்களை எதையும் நிறுத்தி விடாதீர்கள். கோட்டைக்கே செல்லாமல் கோப்புக்களையே பார்க்காமல் நிதி பற்றிய அனுமான அறிக்கை கொடுத்ததைப்போல் இல்லாமல் ,ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு பல்வேறு நிதி உதவியை நிறுத்தினாலும் , தனது நிர்வாக திறமைகளால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தாங்கள் தர முடியாவிட்டாலும் ஏற்கனவே தரப்பட்ட திட்டங்களை நிறுத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதே தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய கோரிக்கையாக உள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம்
### மே 16 (1993)



திருத்துறைப்பூண்டி வட்டக் கழகச் செயலாளர், தஞ்சை மாவட்ட அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

திருத்துறைப்பூண்டி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“திருச்சிக்கு அன்பில் தர்மலிங்கமும், தஞ்சைக்கு பண்பில் தர்மலிங்கமும்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**